மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ம் நாள் வியாழக்கிழமை
அ.வ.எண். 72/24
பி.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்: ரத்தினமாலா | தேதி : 16.04.26 |
| வயது : | க/பெ : ரவி (எ) ரவிசெல்வகுமார் |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

<u>16.04.26 குறுக்கு விசாரணை</u>

1.நான் தற்போது சென்னையில் குடியிருந்து வருகிறேன். ரத்தினசாமி யார் என்றால் என் அப்பாவின் தந்தை ஆவார். ரத்தினசாமியின் வாரிசுகளில் ஒருவர் தான் வாதி என்றால் சரிதான். வாதி வாரிசு உரிமை அடிப்படையில் தபசில் சொத்தினை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. தபசில் சொத்தில் வாதி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். வாதியின் சகோதரர்கள் எங்கு உள்ளனர் என்றால் பக்கத்து வீடுகளில் உள்ளனர்.

2.வாதி அவரது தாயாரை நன்கு பராமரித்து வந்ததால் அவரது சகோதரர்கள் 2 ம் தபசில் சொத்தினை வாய்மொழியாக வாதிக்கு கொடுத்துவிட்டனர் என்றால் சரியல்ல. அதனை தொடர்ந்து 2 ம் தபசில் சொத்தில் வாதி ஆடு, மாடு கட்டி தொழுவம் அமைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. கோயில்செல்வி எனக்கு என்ன உறவுமுறை என்றால் என் சித்தப்பாவின் மருமகள் ஆவார். அவர் தற்போது சென்னையில் உள்ளார்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 18:14:55 +0530

3.தபசில் சொத்துக்களை வாதி வாரிசு அடிப்படையில் பட்டா பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. வாதியின் அனுபவத்தினை எவ்வித உரிமையும் இல்லாமல் இடையூறு செய்கிறேன் என்றால் சரியல்ல. கோயில் செல்வி எனது உறவினர் என்பதால் அவர் பெயரில் சொத்து உள்ளதாக பொய் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. கோயில் செல்வி பெயரில் தபசில் சொத்து இருப்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யலாமா என்றால் 2 ம் தபசில் சொத்துக்கான ஆவணம் மட்டும் தாக்கல் செய்யலாம்.

4.கோயில் செல்வி பெயரில் எந்த ஆவணமும் இல்லாததால் தான் எதிர்வழக்குரையுடன் நான் எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN
Digitally signed by HARIRAMAKRISHNAN
Date: 2026.04.16 18:14:58 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.